# தமிழ்

## வாரப்பாடசாலை செயற்பாட்டுப் பத்திரம்

தரம் 13

01. குகப்படலத்தில், பரதனது படை கங்கைக்கரையை அடைந்தது முதல் பரதன் மேல் சீற்றம் கொண்ட குகன் படை திரட்டியது வரையுள்ள பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
அ. பரதனுடன் வந்த சேனையின் தோற்றம்.
ஆ. அச்சேனையினைக் கண்ட குகனின் சீற்றம்.
இ. அவன் வீரத்தோடு போருக்குத் தயாரானமை.
ஈ. பயின்றுள்ள அணிகளின் சிறப்பு

02. **இரு துயரங்கள்** நாடகத்தில்
அ. இரு துயரங்களுக்கும் இடையிலான முரண்
ஆ. டொக்டர் கந்தப்புஇ மனோகரன் ஆகிய பாத்திரங்களின் நடத்தை மூலம் மனித இயல்பு பற்றி புரிந்து கொள்பவற்றை விளக்குக.
இ. நவீன நாடகத்தின் சில முக்கிய பண்புகள் வெளிப்படுமாற்றை விளக்குக.

03. "**தமிழர் நாகரிகத்தில் கிராம வாழ்க்கை**" என்ற புதுமைப்பித்தனின் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு
அ. நாகரிகம் என்றால் என்ன?
ஆ. கிராம வாழ்க்கையில் நாகரிகத்தின் இடம் எத்தகையது?
இ. கிராம வாழ்க்கைக்கும் நகர வாழ்க்கைக்கும் இடையிலான வேறுபாடு எத்தகையது?
ஈ. கட்டுரையாசிரியரின் மொழிநடை பற்றி கருத்துரைக்குக.

04. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.
அ. **பண்டிதர் மு. நல்லத்தம்பியின்** பாரதியார் பாடலினூடாக வெளிக் காட்டப்பட்ட பாரதியாரைப் பற்றியும் பாரதியார் பாடல்கள் பற்றிய கருத்துக்கள்
ஆ. **திருவாசகம், கோயில் திருப்பதிகத்தில்** தன்னை சிவபெருமான் ஆட்கொண்ட விதம் பற்றிய மாணிக்கவாசகரின் கருத்துக்கள்
இ. **தியாகம்** என்ற சிறுகதையில் கதிரேசன் செட்டியாரின் குணாம்சங்கள்.
ஈ. **ஈழ நாட்டுக் குறம்** என்ற கவிதையினூடாக ஈழ நாட்டின் சிறப்பும் பெருமையும்.